வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 22.8.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நம் நாட்டின் விண்வெளி ஆய்வு நிலையம் விரைவில் ஏற்படுத்தப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் திரு சி பி இராதாகிருஷ்ணன், திரு சுதர்ஷன் ரெட்டி ஆகியோரது மனுக்கள் ஏற்கப்பட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
- புதிய தொழில் தொடங்குவதற்கு ஏற்ற உள்கட்டமைப்பு வசதிகள் புதுச்சேரியில் சிறப்பாக இருப்பதாக துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார்.
- பிரெஞ்சிந்திய இளம் பெண் இயக்குநர், இயக்கிய குட் பை மாமாஜி அனிமேஷன் திரைப்படம் அலையன்ஸ் பிரான்சே அரங்கில் திரையிடப்பட்டது.

<u>தேசிய விண்வெளி தினம் 1(16)</u>

நம் நாட்டின் விண்வெளி ஆய்வு நிலையம் விரைவில் ஏற்படுத்தப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். 2 ஆவது தேசிய விண்வெளி தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, பிரதமர் விடுத்துள்ள காணொளி செய்தியில், விரைவில் இத்தினம் இளைஞர்களை கவரும் கொண்டாட்ட தினமாக உருவெடுக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார். ககன்யான் விண்வெளி திட்டம் விரைவில் தொடங்கப்படும் என்று கூறியுள்ள அவர், அதி நவீன தொழில்நுட்பங்களான மின்விசை உந்து சக்தி, செமி க்ரையோஜெனிக்

இன்ஜின் விண்வெளி திட்டங்களில் இந்தியா சாதனை படைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த 11 ஆண்டுகளில் விண்வெளி துறையில் பல்வேறு சீர்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு ஒன்றன் பின் ஒன்றாக சாதனைகள் படைக்கப்படுவதாக அவர் பெருமிதம் தெரிவித்தார். இந்தியாவின் ஆளுமையில் விண்வெளி திட்டமும் முக்கிய அங்கம் வகிப்பதாக பிரதமர் எடுத்துரைத்தார். விவசாயிகளுக்கான பயிர் காப்பீடு முதல், மீனவர்களுக்கான பாதுகாப்பு வழிகாட்டுதல்கள், பேரிடர் மேலாண்மை வரை சாமானிய மக்களின் வாழ்க்கை முறையை மத்திய அரசின்

__*தேசிய விண்வெளி தினம்* 2(7)__

விண்வெளி தொழில்நுட்ப திட்டங்கள் இலகுவாக்குவதாக கூறினார். 2023 ஆம் ஆண்டு இதே நாளில் சந்திரயாண் – 3 திட்டத்தின் கீழ், நிலவின் தென் துருவத்தில் விக்ரம் லேண்டர் கருவி வெற்றிகரமாக தரை இறங்கியதை தொடர்ந்து இத்தினம் விண்வெளி தினமாக கொண்டாடப்படுகிறது. ஆரியபட்டா முதல், ககன்யாண் வரை எல்லையற்ற வாய்ப்புகளுக்கான நமது முன்னோர்களின் அறிவாற்றல் என்ற கருப்பொருளுடன் நாடு முழுவதும் இன்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

__*ஜிதேந்திர சிங்* (9)__

சந்திரயாண் – 3 வெற்றியை பறைசாற்றும் வகையில் விண்வெளி தின கொண்டாட்டங்கள் இன்று பெருமிதத்துடன் கொண்டாடப்படுவதாக மத்திய விண்வெளித் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். கடந்த 11 ஆண்டுகளில் விண்வெளி துறையில் தனியார் பங்களிப்புக்கு அனுமதி வழங்கியதே இத்துறையில் மத்திய அரசு கொண்டு வந்த மிகப் பெரிய சீர்திருத்தம் என்று அவர் எடுத்துரைத்தார்.

மேலும், இஸ்ரோ தலைவர் திரு நாராயணன் வெளியிட்டுள்ள செய்தியில், இந்தியாவின் விண்வெளி திட்டங்கள் உலக நாடுகளுக்கு முன்னோடியாக நம் தேசத்தை முன் நிறுத்துவதாக பெருமிதம் தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் தேர்தல் (6)

குடியரசு துணைத் தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் திரு சி பி இராதாகிருஷ்ணன், இண்டி கூட்டணி வேட்பாளர் திரு சுதர்ஷன் ரெட்டி ஆகியோரது மனுக்கள் ஏற்கப்பட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. குடியரசு துணைத் தலைவர் தேர்தல் அடுத்த மாதம் 9 ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், மனுக்களை திரும்ப பெற நாளை மறுநாள் வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

வணிக மாநாடு 1 (18)

இந்திய வம்சா வழியினரின் உலகளாவிய அமைப்பு கோபியோ சார்பில் 3 நாள் சர்வதேச வணிக மாநாடு மற்றும் கண்காட்சி புதுச்சேரி பழைய துறைமுக வளாகத்தில் இன்று நடைபெற்று வருகிறது. துணைநிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாநாட்டினை தொடங்கி வைத்து கண்காட்சியைப் பார்வையிட்டார். அப்போது பேசிய அவர், இந்திய வம்சாவழியை சார்ந்தவர்களும் வெளிநாட்டு வாழ் இந்தியர்களும் உலகின் பல நாடுகளில் சிறந்த தொழில் முனைவோராக, தொழில் அதிபர்களாக வளர்ச்சி அடைந்திருப்பதாகவும், அவர்கள் இந்தியாவில் உள்ள இளைஞர்களுக்கு பெரும் ஊக்க சக்தியாக திகழ்வதாகவும் தெரிவித்தார். அவர்கள் தங்களுடைய முதலீட்டை மீண்டும் தாய் நாட்டின் வளர்ச்சிக்காக முதலீடு செய்யும்போது இந்தியா மூன்றாவது வளர்ச்சி பெற்ற பொருளாதர நாடாக விரைவில் வளர்ச்சி பெறும் என்றார். புதுச்சேரியில் முதலீடு செய்பவர்களுக்கு ஏற்படும் சிரமங்களை குறைக்கும் வகையில் அனுமதி விரைவில் வழங்குவதற்கான

நடைமுறையை அரசு செயல்படுத்தி வருகிறது என்றார். புதிய தொழில் தொடங்குவதற்கு ஏற்ற உள்கட்டமைப்பு வசதிகள் புதுச்சேரியில் சிறப்பாக இருப்பதாக தெரிவித்த துணை நிலை ஆளுநர், விமான நிலைய விரிவாக்கம், கடல் வழி போக்குவரத்து, மற்றும் நெடுஞ்சாலை

*வணிக மாநாடு* 2 (12)

மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருவதாகவும், ஆன்மீக சுற்றுலா, சுகாதார சுற்றுலா, சுற்றுச்சூழல் சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா என்று அனைத்து வகையிலும் சுற்றுலாவை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்தார். சுற்றுலாப் பயணிகளால் அதிகம் விரும்பப்படும் இடமாக, உலகில் அவசியம் பார்க்க வேண்டிய இடங்களில் பிரான்சில் உள்ள துலஸ் நகரத்தை அடுத்து புதுச்சேரி இரண்டாவது இடத்தில் இருக்கிறது என அவர் பெருமிதம் தெரிவித்தார். பிரதமர் குறிப்பிட்டதை போல "பெஸ்ட்" புதுச்சேரியை உருவாக்குவதற்கான சூழலை அரசு மேற்கொண்டு வருவதாகவும், முதலீட்டாளர்கள் இங்கே முதலீடுகள் செய்வதன் மூலம் பாரதப் பிரதமர் விரும்பும் விக்சித் பாரத் என்ற உருவாக்குவதில் முதலீட்டாளர்களும் பங்கு பெற முடியும் என்றார்.

வாய்ஸ்

*வணிக மாநாடு* 3 (7)

நிகழ்ச்சியில், பேசிய அமைச்சர் திரு லட்சமி நாராயணன், உலக அளவில் நடத்தப்பட்ட ஆய்வில் மக்கள் விரும்பி செல்லக்கூடிய நகரங்களில் புதுச்சேரி 2 ஆவது இடத்தை பிடித்துள்ளது என்பது நமக்கு கிடைத் பெருமை என்றார். சுற்றுலாவை மேம்படுத்த மத்திய அரசோடு இணைந்து பல நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

மாநாட்டில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழில் முதலீட்டாளர்கள் மற்றும் “கோபியோ“ அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

குறும்படம் 1 (3)

பிரெஞ்சிந்திய இளம் பெண் இயக்குநர் திருமதி டாஸ்லின் ஓமர்கட்டார் புதுச்சேரியின் தமிழ் கலாச்சார பண்பாட்டை பிரதிபலிக்கும் வகையில் குட் பை மாமாஜி என்ற குறும்படத்தை இயக்கி உள்ளார்.

வாய்ஸ்

வாய்ஸ்

குறும்படம் 2 (14)

பிரெஞ்சிந்திய இளம் பெண் இயக்குநர், இயக்கிய குட் பை மாமாஜி அனிமேஷன் திரைப்படம் அலையன்ஸ் பிரான்சே அரங்கில் திரையிடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு ரங்கசாமி, குறும்படத்தை வெளியிட, சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம் அதனை பெற்றுக் கொண்டார். நிகழ்ச்சியில் பேசிய திரு ரங்கசாமி, புதுச்சேரியின் கலாச்சாரம், பண்பாட்டை அனிமேஷன் மூலம் இயக்கி இருப்பது மகிழ்ச்சி அளிப்பதாகவும், புதுச்சேரியின் கலாச்சாரத்தை உலக அரங்கிற்கு கொண்டு சென்றுள்ள இயக்குநரை பாராட்டுவதாகவும் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், சுற்றுலாத் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், அலையன்ஸ் பிரான்சிஸ் தலைவர் டாக்டர் நல்லாம் சத்தீஷ், விஷன் ஹோலிஸ்டிக் மேலாண் இயக்குநர் திரு சுரேஷ் உட்பட பலரும் பங்கேற்றனர். தமிழ் பண்பாட்டை பிரதிபலிக்கும் இந்த குறும்படம் 20 க்கும் மேற்பட்ட விருதுகளுக்கு பரிந்துரைக்கப் பட்டுள்ளது. ஸ்பெயின், மலேஷியா நாடுகளின் விருதுகளை இக் குறும்படம் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது.

விளையாட்டு (17)

உலக இளையோர் வில் வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா 2 தங்கப்பதக்கங்களை வென்றுள்ளது. கனடாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா 21 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆடவர் குழு பிரிவில் இறுதி ஆட்டத்தில் ஜெர்மனியையும், 18 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆடவர் குழு பிரிவு இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவையும் வென்று இப்பதக்கத்தை கைப்பற்றியது. 18 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவில் யோகேசும், மகளிர் ஒற்றையர் பிரிவில் ஷர்வாரி, ப்ரீத்திகா, ஹம்சினி-யும், 21 வயதிற்கு உட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில் சிக்கிதாவும், அரையிறுதிக்கு முன்னேறி உள்ளனர்.

கஜகஸ்தானில் ஷிம்கேன்டில் நடைபெற்று வரும் ஆசிய துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் அர்ஜீன் பபுதா, இளவேனில் வாலரிவன் இணை இறுதி ஆட்டத்திற்கு முன்னேறி உள்ளது. 11 வயதிற்கு உட்பட்டோருக்கான உலக செஸ் ஒலிம்பியாட் போட்டியில் இந்தியா 1 தங்கம், 1 வெண்கல பதக்கம் வென்றது. கொலம்பியாவில் நடைபெற்ற இப்போட்டியில் பிரதமேஷ் தங்க பதக்கத்தையும், இளம்பரிதி வெண்கல பதக்கத்தையும் வென்றனர்.

வானிலை (5)

தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக வரும் 25 ஆம் தேதி வரை தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளிலும் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.